A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 79 / 2024</u>**

திருமதி G. பவானி,
39/79 B1, P.S.K. நகர்,
இராஜபாளையம் – 626 108.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு C. குருசாமி)

எதிர்

1) செயற்பொறியாளர்/ பகிர்மானம்/இராஜபாளையம்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
பொன்னகரம், இராஜபாளையம் – 626 117.

2) உதவி செயற்பொறியாளர்/துணை மின் நிலையம்/ இராஜபாளையம்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
O/o. உதவி செயற்பொறியாளர், துணை மின்நிலையம்,
பொன்னகரம், இராஜபாளையம் – 626 117.

3) உதவி மின்பொறியாளர்/ இ&பே/தொட்டியபட்டி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
O/o. உதவி மின் பொறியாளர்/ பகிர்மானம்,
தொட்டியபட்டி, இராஜபாளையம்.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு சு.முத்துராஜ், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/இராஜபாளையம்
திரு M. பூபாலன், உதவி செயற்பொறியாளர்/துணை மின் நிலையம்/ இராஜபாளையம்
திருமதி C. நாகலட்சுமி, உதவி மின்பொறியாளர்/ இ&பே/தொட்டியபட்டி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 20-11-2024</u>**

**<u>கேட்புரை நாள்: 08-01-2025</u>**

**<u>ஆணை நாள்: 21-01-2025</u>**

20.11.2024 அன்று பெறப்பட்ட திருமதி G. பவானி, 39/79 B1, P.S.K. நகர், இராஜபாளையம் – 626 108 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 79/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.01.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி 2016–இல் அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி 2016–இல் அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை உரிமதாரரின் செலவில் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய புகார் மனுவின் அடிப்படையில் உதவிபொறியாளர் / இ& கா/ தொட்டியபட்டி அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு பொதுப்பாதை சான்றின் அடிப்படையில் பாதை என குறிப்பிடப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்ற இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் 05.07.2024 அன்று விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின்பகிர்மான வட்டம் 21.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மனுதாரர் திருமதி.G.பவானி அவர்கள் தனது இடத்தில் உள்ளதாக குறிப்பிடும் மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்றியமைக்க விரும்பும் பட்சத்தில் DCW முறையில் விண்ணப்பம் அளித்து மாற்றம் செய்து கொள்ளலாம் என உத்தரவிட்டு மன்ற மனு எண்: 41/2024 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.01.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு C. குருசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு சு.முத்துராஜ், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ இராஜபாளையம், திரு M. பூபாலன், உதவி செயற்பொறியாளர்/துணை மின் நிலையம்/ இராஜபாளையம் மற்றும் திருமதி C. நாகலட்சுமி, உதவி மின்பொறியாளர்/ இ&பே/தொட்டியபட்டி, விருதுநகர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டம் பிள்ளையார்குளம் கிராமத்தில் சர்வே எண்.763/3A1B மற்றும் 767/2B2 ல் சுமார் 45 செண்டு நிலம் தனக்கு சொந்தமாக உள்ளதாகவும், தொலைவில் உள்ள ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு அந்த நிலத்தின் வழியாக மின் வயர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், இது தெரிய வந்தவுடன் அவர் அந்த மின் வயர்களை எடுத்து அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்லும்படி மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு இணையதளம் மூலம் 05-07-2024 அன்று கோரிக்கை மனு அளித்திருந்ததாகவும் அந்த மனுவின் எண்.CGRF/507242051164/05-07-2024 எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அந்த மனு தொடர்பாக முதலில் இராசபாளையம் தொட்டியபட்டி துணை மின்நிலைய உதவி பொறியாளர் கள ஆய்வு செய்து அந்த நிலத்தின் உரிமைக்குண்டான ஆவணங்களை சமர்பிக்கும்படி கூறியதாகவும், அதன்படி, அவர் அந்த நிலத்திற்குண்டான கிரையப் பத்திரம், வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள பட்டா, அதன் FMB வரைபடம் அந்த இடம் பிளாட்டாகத்தான் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதற்குரிய வரைபடம் ஆகியவற்றை அவரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்

5.3 அதன் பின்பு செயற் பொறியாளர்/பகிர்மானம்/இராசபாளையம் அவர்களும் உதவி செயற்பொறியாளர்/துணை மின்நிலையம்/இராசபாளையம் அவர்களும் அனுப்பிய கடிதத்தில், மின் வயர்கள் கொண்டு சென்றுள்ள இடமானது 75 அடி நீளம். 20 அடி அகலம் கொண்ட செம்மண் பாதை என்று பிள்ளையார்குளம் ஊராட்சி தலைவரால் சான்றளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மின் வயர்கள் நிறுவப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள் என்றும், அந்த கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக கூறிய சான்றை அவர்கள் தர மறுத்ததால் அதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தான் கேட்டுப் பெற்றுள்ளதாகவும், அந்த சான்றையும் அதற்கு துணையாக

இணைக்கபட்டிருந்த Layout யும் மேலோட்டமாக பார்த்தாலே அந்த சான்று தவறானது என்று தெரியவரும் என்றும், மேலும் அந்த Layout ஆனது மின் வயர்கள் கொண்டு சென்றுள்ள இடத்தின் ஒரு பகுதியைத் தான் சார்ந்தது என்றும், அந்த Layout மின் வயர்கள் கொண்டு சென்றுள்ள இடமானது பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்றும், மீதமுள்ள இடம் வேறொருவருக்கு சொந்தமாயிருந்து தான் கிரையம் வாங்கிய இடமாகும் என்றும், இவற்றை எடுத்துக் கூறி அவர், உதவி செயற் பொறியாளர்/துணை மின்நிலையம்/இராசபாளையம், செயற் பொறியாளர்/பகிர்மானம்/இராசபாளையம், மேற்பார்வை பொறியாளர், விருதுநகர் மின் பகிர்மான வட்டம் விருதுநகர் ஆகியோர்களுக்கு 02-09-2024 அன்று பதில் கடிதம் அனுப்பி, தன்னுடைய இடத்தின் வழியாக செல்லும் மின் வயர்களை எடுத்து அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்லும்படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதற்கிடையில், விருதுநகர் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்கள் விருதுநகர் மின் பகிர்மான வட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்ற கூட்டம் 27-09-2024 அன்று விருதுநகரில் நடைபெறுவதாகவும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் தனக்கு கடிதம் அனுப்பியிருந்தார்கள் அதன்படி தனது சார்பாக தன்னுடைய கணவர் திரு.சி.குருசாமி அந்த கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும், அவர் அந்த கூட்டத்தில் பாரா 3ல் கூறப்பட்டுள்ளதை ஆவணங்களோடு எடுத்துக் கூறியிருந்ததாகவும், அதற்கு மேற்பார்வை பொறியாளர், ஒரு நிலத்தின் வழியாக மின் வயர்கள் கொண்டு செல்வதற்கு அந்த இடத்திற்குரிய ஊராட்சியின் தலைவர் அந்த இடத்தை பொதுப்பாதை என்று சான்று வழங்கினால் அந்த சான்று மேலோட்டமாக பார்த்தாலே அது தவறான சான்று என்று அறிந்து கொள்ளலாம் என்று இருந்த போதிலும் அதன் உண்மைத் தன்மையைப் பற்றி கண்டு கொள்ளாமல் அந்த இடத்தின் வழியாக மின் வயர்களை கொண்டு செல்லலாம் என்றும் அவர் எந்த இடத்தை பாதை என்று சான்றளித்தாலும் அதை ஏற்றுக்கொள்வோம் என்றும் அவருக்கு இதுபோன்று சான்று அளிக்கும் அதிகாரம் உள்ளதா என்பது பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை என்றும் கூறியிருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் சான்று மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களை வைத்து அவற்றில் கூறப்பட்டுள்ள இடமும் மின் வயர்கள் கொண்டு செல்லும் இடமும் ஒன்றுதான் என்று

தங்கள் அலுவலர்களால் உறுதி செய்யப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியிருக்கிறார் என்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் சட்டம்/விதிகள்/அலுவலக சுற்றறிக்கை/விதிமுறைகள் ஆகியவற்றின் எந்த பிரிவுகளில் அவர்கள் கூறியது போல் உள்ளது என்று தெரியவில்லை என்றும், மேலும் வருவாய்த் துறை அலுவலர்கள்தான் நிலம் பற்றி சான்றளிக்க முடியும் என்றிருக்கும்போது, ஒரு ஊராட்சி தலைவரின் சான்றை எப்படி ஏற்றுக்கொண்டீர்கள் என்று கேட்டதற்கும் அவர் எவ்வித பதிலும் அளிக்கவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும், தான் தாமதமாக புகார் அளித்துள்ளதால் மின் வயர்களை அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்வதற்கு ஆகும் அனைத்து செலவையும் தான் ஏற்றுக்கொண்டால்தான் மின்வயர்களை மாற்றி கொண்டு செல்ல முடியும் என்றும் கூறியிருக்கிறார். அதற்கு தன்னுடைய கணவர், சென்னை உயர்நீதிமன்றம் W.P. No. 9811 of 2013 என்ற வழக்கில் 10-06-2014 ல் தீர்ப்பளித்துள்ளபடி அந்த வழக்கின் நுதல்-பொருள்களும் தங்கள் புகாரின் நுதல்-பொருள்களும் ஒன்றாக இருப்பதால், அனைத்து செலவையும் மின்வாரியம்தான் ஏற்கவேண்டும் என்றும் அனைத்து செலவையும் தங்களை ஏற்க சொல்வது அந்த தீர்ப்புக்கு எதிரானது என்றும் தீர்ப்பில் உள்ளது போல் Taminadu Electricity Supply Code 2004ன் பிரிவு 5(6) தங்களுக்கு பொருந்தாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது போல் காலதாமதம் என்பதால் மின்வாரியத்தின் தவறான செயல்பாடு சரியானது என்று ஆகிவிடாது என்பதையும் எடுத்துக் கூறி அந்த தீர்ப்பின் நகலையும் கொடுத்து தங்களுடைய இடத்தின் வழியாக தவறுதலாக கொண்டு சென்றுள்ள மின் வயர்களை அகற்றி அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்லும்படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், ஆனால், மேற்பார்வை பொறியாளர் அவர்கள் அந்த தீர்ப்பானது அதன் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் மட்டும்தான் பொருந்தும் என்றும் அது தங்களை கட்டுப்படுத்தாது என்றும் கூறி தங்களின் வேண்டுகோளை நிராகரித்திருப்பதாகவும், இந்த தீர்ப்பானது பாட்னா உயர்நீதி மன்ற தீரப்பை மேற்கோள் காட்டி வழங்கப்பட்ட தீர்ப்பாகும். அப்படி இருக்கையில் எதை அடிப்படையாக கொண்டு அவர்கள் மேற்சொன்னவாறு கூறினார்கள் என்பது தெரியவில்லை மேற்சொன்ன அவர்களின் அனைத்து

கூற்றுகளும் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் எதிரானதாகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 Tamilnadu Electricity Ombudsman ல் மேல் முறையீடு செய்யும் படிவத்தில் மேல் முறையீட்டின் நுதல்–பொருள் (Subject Matter) பற்றி உரிய நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருந்தால், அந்த நுதல்–பொருள் பற்றி மேல் முறையீடு செய்யக்கூடாது என்றுள்ளது என்றும், ஆகவே ஒரு நுதல்–பொருள் பற்றி நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருந்தால் அதே நுதல்–பொருள் பற்றிய புகார்களில் மின்வாரியமும் புகார்தாரரும் நீதிமன்ற ஆணைப்படிதான் செயல்பட வேண்டும் என்று பொருளாகிறது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 சான்றளிக்கும் அதிகாரம் இல்லாத ஊராட்சி தலைவரின் சான்றை அதுவும் தவறான சான்றை வைத்து சான்றின் உண்மைத்தன்மையை ஆராயாமல் தங்கள் நிலத்தின் மீது மின் வயர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாலும் உயர்நீதிமன்றம் அளித்துள்ள மேற்சொன்ன தீர்ப்பின் வழக்கில் உள்ள அனைத்து நுதல்–பொருள்களும் தன்னுடைய புகாரிலும் இருப்பதாலும் தங்களுடைய நிலத்தின் மீது தவறுதலாக கொண்டு செல்லப்பட்டுள்ள மின் வயர்களை எடுத்து மின் வாரியத்தின் செலவிலேயே அருகிலுள்ள பொது பாதை வழியாக கொண்டுசெல்வதற்கு ஆணையிடுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார் இதனால் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக ரூ.50,000/– இழப்பீடு வழங்குவதற்கும் ஆணையிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திருமதி. G. பவானி என்பவர் 05.07.2024 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் (CGRF) கோரிக்கை மனு ஒன்று இணையதளம் வாயிலாக பதிவிடப்பட்டுள்ளதாகவும், மனு எண்:507242051164/ 05.07.2024 அந்த மனுவில் விருதுநகர் மாவட்டம் பிள்ளையார்குளம் வருவாய் கிராமத்திற்க்கு உட்பட்ட மனுதாரர் நிலத்தின் வழியே மின் வயர்கள் செல்வதாகவும் அதனை அகற்றி மாற்று வழியில் கொண்டு செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்ததாகவும், அந்த மின் வயர்கள் மனுதாரர் நிலத்திலிருந்து கிழக்கே வெகுதூரம் தள்ளி உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு

கொடுப்பதற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அந்த மனு தொடர்பாக 06.07.2024 அன்று உதவி மின்பொறியாளர் /இ&பே/தொட்டியபட்டி அவர்களால் களஆய்வு செய்யப்பட்டு பதில் அறிக்கை ஆனது 19.07.2024 அன்று உதவி செயற்பொறியாளர் /துணைமின்நிலையம்/ இராஜபாளையம் அவர்களால் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, மனுதாரர் இடத்திற்கு சுமார் 130 மீட்டர் தொலைவில் உள்ள வீட்டு மின் இணைப்பானது மி.இ.எண்.283–001–2014 ஆகும் என்றும், அந்த மின் இணைப்பிற்குண்டான ஆவணங்கள் மின் வருவாய் பிரிவு/ இராஜபாளையம் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதாகவும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் (CGRF) மனுவிற்கு 19.07.2024 அன்று பதில் அளிக்கப்பட்டதாகவும், அந்த பதில் அறிக்கையில் கீழ்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும், தாங்கள் குறிப்பிட்ட இடத்தில் தென்வடலாக Single phase & Neutral மின் கடத்திகள் செல்கிறது என்றும், இவை திருமதி.பஞ்சவர்ணம் அவர்களுக்கு மின் இணைப்பு(எண்:283–001–2014) கொடுக்க 2016ம் ஆண்டு விரிவாக்கப்பணியின் அடிப்படையில் வேலை செய்யப்பட்டபோது நிறுவப்பட்ட மின் வயர்களாகும் என்றும், இந்த மின் வயர்கள் செல்லும் இடமானது 75அடி நீளம் 20அடி அகலம் கொண்ட செம்மண் பாதை ஊராட்சிக்கு சொந்தமான பொதுப்பாதை என்று அன்றைய தேதியில் (28.07.2016) பிள்ளையார்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் சான்று அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த சான்றின் அடிப்படையில் அன்றைய தேதியில் இருந்த உதவி மின்பொறியாளர் / இ&பே / தொட்டியபட்டி அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அன்றைய உதவி செயற்பொறியாளர்/துணை மின் நிலையம் /இராஜபாளையம் அவர்களால் மதிப்பீடு அனுமதி தரப்பட்டு விஸ்தரிப்பு வேலை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் விஸ்தரிப்பு வேலை செய்யப்பட்ட போது எந்த ஒரு ஆட்சேபனையும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் மனுதாரர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலி சமீப காலத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளதாகவும், திருமதி. பஞ்சவர்ணம் என்பவர்க்கு மின் இணைப்பு வழங்குவதற்காக மதிப்பீடு செய்ய கள ஆய்வு செய்த போது மேற்படி பாதை பொது பாதையாக பயன்படுத்தப்பட்டு வந்தது, அதற்குரிய ஆவணமான பிள்ளையார்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் அளிக்கப்பட்ட பொதுப் பாதை சான்றானது அன்றைய தேதியில் (28.07.2016) திருமதி.பஞ்சவர்ணம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் தான் மின் வாரிய விதிகளின் படி அன்றைய தேதியில் பொது பாதை ஓரமாக தான் மின் பாதை அமைக்கப்பட்டு திருமதி. பஞ்சவர்ணம் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திருமதி பஞ்சவர்ணம் அவர்களால் மின் இணைப்பு பெறுவதற்காக 2016ம் ஆண்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் மின் வருவாய் பிரிவு / இராஜபாளையம் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு RTI வாயிலாக மனுதாரருக்கு தகவலாக வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த தகவல்கள் அனைத்தும் விருதுநகர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மின் நுகர்வோர் குறை தீர்ப்பு மன்றத்தில் கலந்து கொள்ளப்பட்டு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரின் மின்கட்டமைப்பை மாற்ற கோரும் இடம் உரிய துறையினால் அங்கீகரிக்கபடாத வீட்டு மனை பிரிவாக உள்ளதாகவும், எனவே, மதிப்பீட்டின் அடிப்படையில்தான் மின்பாதையை மாற்ற இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டம் பிள்ளையார்குளம் கிராமத்தில் சர்வே எண்.763/3A1B மற்றும் 767/2B2 ல் சுமார் 45 செண்டு நிலம் தனக்கு சொந்தமாக உள்ளதாகவும், தொலைவில் உள்ள ஒரு வீட்டிற்கு

மின் இணைப்பு கொடுப்பதற்கு அந்த நிலத்தின் வழியாக மின் வயர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், இது தெரிய வந்தவுடன் அவர் அந்த மின் வயர்களை எடுத்து அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்லும்படி மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு கோரிக்கை மனு அளித்திருந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 அந்த மனு தொடர்பாக முதலில் இராசபாளையம் தொட்டியபட்டி துணை மின்நிலைய உதவி பொறியாளர் கள ஆய்வு செய்து அந்த நிலத்தின் உரிமைக்குண்டான ஆவணங்களை சமர்பிக்கும்படி கூறியதாகவும், அதன்படி, அவர் அந்த நிலத்திற்குண்டான கிரையப் பத்திரம், வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள பட்டா, அதன் FMB வரைபடம் அந்த இடம் பிளாட்டாகத்தான் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதற்குரிய வரைபடம் ஆகியவற்றை அவரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்

7.4 அதன் பின்பு செயற் பொறியாளர்/பகிர்மானம்/இராசபாளையம் அவர்களும் உதவி செயற்பொறியாளர்/துணை மின்நிலையம்/இராசபாளையம் அவர்களும் அனுப்பிய கடிதத்தில், மின் வயர்கள் கொண்டு சென்றுள்ள இடமானது 75 அடி நீளம். 20 அடி அகலம் கொண்ட செம்மண் பாதை என்று பிள்ளையார்குளம் ஊராட்சி தலைவரால் சான்றளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மின் வயர்கள் நிறுவப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள் என்றும், அந்த இடம் வேறொருவருக்கு சொந்தமாயிருந்து தான் கிரையம் வாங்கிய இடமாகும் என்றும், தன்னுடைய இடத்தின் வழியாக செல்லும் மின் வயர்களை எடுத்து அருகிலுள்ள பொது பாதையில் கொண்டு செல்லும்படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் திருமதி. G. பவானி அவர்கள் தனது நிலத்தின் வழியே மின் வயர்கள் செல்வதாகவும் அதனை அகற்றி மாற்று வழியில் கொண்டு செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்ததாகவும், அந்த மின் வயர்கள் மனுதாரர் நிலத்திலிருந்து கிழக்கே வெகுதூரம் தள்ளி உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, மனுதாரர் இடத்திற்கு சுமார் 130 மீட்டர் தொலைவில் உள்ள வீட்டு மின் இணைப்பானது மி.இ.எண்.283–001–2014 ஆகும் என்றும், அந்த இடத்தில் தென்வடலாக Single phase & Neutral மின் கடத்திகள் செல்கிறது என்றும், இவை திருமதி.பஞ்சவர்ணம் அவர்களுக்கு மின் இணைப்பு(எண்:283–001–2014) கொடுக்க 2016ம் ஆண்டு விரிவாக்கப்பணியின் அடிப்படையில் வேலை செய்யப்பட்டபோது நிறுவப்பட்ட மின் வயர்களாகும் என்றும், இந்த மின் வயர்கள் செல்லும் இடமானது 75அடி நீளம் 20அடி அகலம் கொண்ட செம்மண் பாதை ஊராட்சிக்கு சொந்தமான பொதுப்பாதை என்று அன்றைய தேதியில் (28.07.2016) பிள்ளையார்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் சான்று அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த சான்றின் அடிப்படையில் அன்றைய தேதியில் இருந்த உதவி மின்பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டு விஸ்தரிப்பு வேலை செய்யப்பட்டதாகவும், மேலும் விஸ்தரிப்பு வேலை செய்யப்பட்ட போது எந்த ஒரு ஆட்சேபனையும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் மனுதாரர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலி சமீப காலத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளதாகவும், திருமதி. பஞ்சவர்ணம் என்பவர்க்கு மின் இணைப்பு வழங்குவதற்காக மதிப்பீடு செய்ய கள ஆய்வு செய்த போது மேற்படி பாதை பொது பாதையாக பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், அதற்குரிய ஆவணமான பிள்ளையார்குளம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் அளிக்கப்பட்ட பொதுப் பாதை சான்றானது அன்றைய தேதியில் (28.07.2016) திருமதி.பஞ்சவர்ணம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் தான் மின் வாரிய விதிகளின் படி அன்றைய தேதியில் பொது பாதையின் ஓரமாக தான் மின் பாதை அமைக்கப்பட்டு திருமதி. பஞ்சவர்ணம் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் மேலும் மின்கம்பங்கள் எதுவும் மேல்முறையீட்டாளர் முறையிடும் இடத்தில் இல்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) விதித் தொகுப்புகளில் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"68. **Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*

*(2) The provisions contained in sub-section (1) shall not apply-*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer".*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)-இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV-க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

7.9 இவ்வழக்கு சம்பந்தமாக மின்சார சட்டம், 2003-இல் மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

*"The works of Licensees Rules, 2006*

*3. Licensee to carry our works:*

*(1) A Licensee may-*

*(a) carry out works, lay down or place any electric supply line or other works in, through, or against, any building, or on, over or under any land whereon, whereover or whereunder any electric supply-line or works has not already been lawfully laid down or placed by such licensee, with the prior consent of the owner or occupier of any building or land;*

*(b) fix any support of overhead line or any stat or strut required for the purpose of securing in position any aupport of any overhead line on any building or land or having been so fixed, may alter such support:*

*Provided that in case where the owner or occupier of the building or land raised objections in respect of works to be carried out under this rule, the licensee shall obtain permission in writing from the District Magistrate of the Commissioner of Police or any other officer authorized by the State Government in this behalf, for carrying out the works:*

*Provided further that if at any time, the owner or occupier of any building or land on which any works have been carried out or any support of an overhad line, stay of strut has been fixed shows sufficient cause, the District Magistrate of the Commissioner of Police, or the officer authorized may by order in writing direct for any such works, support, stay or strut to be removed or altered.*

*xxx*

*xxx*

*(3) Nothing contained in this rule shall effect the powers conferred upon any licensee under section 164 of the Act."*

மேற்கூறிய விதிப்படி மின்சாரச் சட்டத்தின் 164வது பிரிவுதான் *The works of Licensees Rules, 2006 ஐ விட* உச்சமானது என்பது தெளிவாகிறது.

7.10 எனவே, இந்திய மின்சார சட்டம், பிரிவு 164 மற்றும் தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 164. Exercise of pwers of Telegraph Authority in Certain cases-***

*164. Exercise of powers of Telegraph Authority in certain cases. The Appropriate Government may, by order in writing, for the placing of electric lines or electrical plant for the transmission of electricity or for the purpose of telephonic or telegraphic communications necessary for the proper co- ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying electricity under this Act, subject to such conditions and restrictions, if any, as the Appropriate Government may think fit to impose and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph authority possesses under that Act with respect to the placing of telegraph lines and sts for the posts purposes of a telegraph est established or maintained, by the Government or to be so established or maintained."*

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*
3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*
4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full*

*compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. ”*

7.11 மேற்கண்டுள்ள இந்திய மின்சார சட்டம், பிரிவு 68, 164 மற்றும் இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.12 மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையிலிருந்து மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ள தாழ்வழுத்த மின்பாதையானது 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்பதும், அம்மின்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை என்பதும் மேலும், அம்மின்பாதை அமைக்கப்பட்ட இடமானது 75 அடி நீளம் 20 அடி அகலம் கொண்ட செம்மண் பாதை என்று அன்றைய தேதியில் (28.07.2016) பிள்ளையார்குளம் ஊராட்சி மன்ற தலைவரால் சான்று அளிக்கப்பட்டுள்ளதும், எந்தவொரு வேலியும் இல்லாமல் பொதுப்பாதையாக இருந்ததும் தெரியவருகிறது.

7.13 அன்றைய தினத்தில் பொதுப்பாதை என்ற அடிப்படையிலேயே அதன் ஓரமாக மின் பாதை அமைக்கப்பட்டு திருமதி பஞ்சவர்ணம் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் 2016–இல் திருமதி பஞ்சவர்ணம் என்பருக்கு மின் இணைப்பு வழங்கிய ஆவணங்களின்படி பொது இடம் என்று இருப்பதும் அந்த இடம் காலியாக இருந்து வீடு கட்டுவதற்கு மனைகளாக பிரிக்கப்பட்ட நிலையில் 2016–இல் மின் கட்டமைப்பு நிறுவியபோது வேலி இல்லாமல் இருந்ததும் ஊராட்சி மன்ற தலைவர் பொதுப்பாதை என்று சான்றிட்ட நிலையில் பிற்காலத்தில் அந்த பொதுபாதைக்கு வேலி அமைத்து தற்சமயம் மேல்முறையீட்டாளர் வாதிடுவதும் அறியமுடிகிறது.

7.14 மேலும் மேல்முறையீட்டாளரின் ஆவணங்களில் அவருடைய நில அமைப்பு அயன் புஞ்சை நிலமாக இருந்துதான் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டதும் அதுவும் தற்சமயம் வரை உரிய துறையினரால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை

அறியமுடிகிறது. இந்நிலையில் மின் கட்டமைப்பு காலியான இடங்களில் உரிமதாரர் நிறுவுவது செலவீனங்களின் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு மின் இணைப்பு வழங்கும் நிகழ்வாக கருதப்படுகிறது, தற்சமயம் காலி இடமாக இருப்பதும் போதிய செங்குத்து இடைவெளி 17 அடியுடன் மின்பாதை விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

7.15 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் காலியாக இருந்த இடத்தில் விதிகளின்படி அமைக்கப்பட்ட மின் கட்டமைப்பை அது நிறுவப்பட்ட 2016–இல் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் தற்சமயம் 2024–இல் வாரிய செலவில் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை காலங்கடந்த நிலையில் எழுப்புவதாக தெரியவருகிறது. மேலும் மின்பாதை அமைக்கப்பட்ட 2016 காலகட்டத்தில் ஏதாவது உரிமதாரரிடம் ஆட்சேபனை கொடுக்கப்பட்டதா என வினவியபோது அவ்வாறு செய்யவில்லை என தெரிவித்தார். மேலும் மின்கம்பங்கள் ஏதாவது தாங்கள் ஆட்சேபனை கூறும் இடத்தில் உள்ளதா என கேட்ட போது இல்லை என மேல்முறையீட்டாளர் கூறினார். ஒரே ஒரு மின்பாதை வழிதடம் ஓரமாக இருப்பதாக தெரிவித்தார். எதிர்மனுதாரர் அவர் உரிமை கோரும் இடம் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவு என்றும் பொதுப்பாதை 2016–இல் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே திருமதி பஞ்சவர்ணம் மின் பயனீட்டாளருக்கு மின்கட்டமைப்பு நிறுவப்பட்டதாக தெரிவித்தார்.

7.16 இந்நிலையில் காலியாக உள்ள இடத்தில் எந்தவித கட்டிடங்கலும் இல்லாததாலும் மேலும் நிறுவப்பட்ட மின்பாதை தகுந்த இடைவெளியுடன் இருப்பதால் ஏற்கனவே நிறுவப்பட்ட மின்பாதை செயல் மேற்கூறிய விதிகளின்படி சரியான செயலாக கருதுவதால் உரிமதாரரின் செலவில் மாற்ற கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள உயர்நீதி மன்ற வழக்கின் தீர்ப்பானது அந்த வழக்கிற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் இவ்வழக்கிற்கு ஏற்றுக் கொள்ள இயலாது.

7.17 இந்நிலையில் விதிகளின்படி போதிய இடைவெளியுடன் நிறுவப்பட்ட மின்பாதையை மேல்முறையீட்டாளர் இடமாற்றம் செய்ய விரும்பினால் அதற்கு ஆகும்

மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.18 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் எனவும் அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகிறது.

7.19 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் TNERC Supply Code Regulation 6–ன்படி – பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு தயார் செய்து உரிய மதிப்பீட்டு தொகையை செலுத்தும்பட்டித்தில் மின்பாதையை மாற்றிதர இயலும் என்ற நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

7.20 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான இழப்பீட்டு தொகை சம்பந்தமாக மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் கோரிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதை கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரும் ஒப்புக் கொண்டார். அந்த கோரிக்கை புது கோரிக்கையாக கருதி ஏற்க இயலாது மட்டுமின்றி மேலும் உரிமதாரரின் செயலில் எந்தவித சேவைகுறைபாடும் இல்லை எனவும் பதிவு செய்யப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, உரிய விதிகளின்படி நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மேல்முறையீட்டாளர் மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின்

பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 79/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி G. பவானி, – By RPAD
39/79 B1, P.S.K. நகர்,
இராஜபாளையம் – 626 108.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/இராஜபாளையம்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
பொன்னகரம், இராஜபாளையம் – 626 117.

3. உதவி செயற்பொறியாளர்/துணை மின் நிலையம்/ இராஜபாளையம்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
O/o. உதவி செயற்பொறியாளர், துணை மின்நிலையம்,
பொன்னகரம், இராஜபாளையம் – 626 117.

4. உதவி மின்பொறியாளர்/ இ&பே/தொட்டியபட்டி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
O/o. உதவி மின் பொறியாளர்/ பகிர்மானம்,
தொட்டியபட்டி, இராஜபாளையம்.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.